அ.வ.எண்.**54/2021** வா.சா.**3 –** செந்தில்குமார் **05.12.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **3**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்தன்பேரில் நீதிமன்றம் வந்துள்ளேன். 1ம் வாதி என் உடன் பிறந்த அக்கா. 1ம் வாதி என் உடன் பிறந்த அக்கா என்பதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்தவர்கள் மூன்று பேர்கள். எனக்கு 2009 ல் திருமணம் நடந்தது. 1ம் வாதிக்கு எனக்கு முன்பே திருமணம் ஆனது, எப்போது என்று ஞாபகம் இல்லை. என் அக்காவிற்கு நான் அடிக்கடி பணஉதவி செய்வேன். அவரது குழந்தை படிப்பிற்காக பணஉதவி செய்வேன். 2013 ம் வருடம் என் அக்காவின் குழந்தைகள் தனியார் பள்ளியில் படித்து வந்தனர். நான் என் அக்காவின் கணவருக்கு கடன் வாங்கிக்கொடுப்பேன் என்றால் சரியல்ல. என் அக்காவின் கணவர் வேலை பார்த்த பெட்ரோல் பங்கிற்கு அருகே ஆட்டோகேரேஜில் நான் வேலை பார்த்தேன். 3ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். அவரது வயது 85 என்றால் அது எனக்கு தெரியாது. நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் விலை போகாத வீட்டை வாங்கிக்கொள்ளுமாறு 3ம் பிரதிவாதியிம் கேட்டேன் என்றால் சரியல்ல. குடும்ப செலவிற்காகவும், குழந்தைகளின் நலனுக்காகவும் கேட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு திருமாநிலையூர் கிராமத்தில் நஞ்சை நிலங்கள் இருந்தன. அந்த சொத்தை விற்கப்பட்டதற்கு எதிராக வாதிகள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. 3ம் பிரதிவாதி அடியாட்களுடன் 1, 2 பிரதிவாதிகளை ஆட்டோவில் ஏற்றிச்சென்று பத்திரத்தில் பதிவு செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் அக்கா கணவர் சொல்லி தெரியும். அவரை 1ம் பிரதிவாதி ஆட்டோவில் ஏற்றிச்சென்றபோது

எனக்கு நேரில் தெரியும். 1ம் பிரதிவாதி என்னிடம் ஆட்டோவில் ஏற்றிச்சென்ற விபரத்தை என்னிடம் போனில் கூறினார், நேரடியாக தெரியாது. நான் சொன்னபடி எதுவும் நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு ஆயுள்பாத்தியம் மட்டும் உள்ளது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி நடத்தி வந்த பெட்ரோல்பங்க் நஷ்டம் ஏற்பட்டதற்கு 1ம் பிரதிவாதிதான் காரணம் என கூறி அவரிடம் வெற்றுத்தாட்களில் கையெழுத்து பெற்றுக்கொண்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. கிரையத்திற்கு எந்தவித பணமும் தரவில்லை என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 3ம் வாதி தாத்தா பென்சனில் இருந்து படித்து வந்தார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த பொய்யான வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்